# அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர்: திருமதி.பெ.ரமணசரஸ்வதி., இ.ஆ.ப.,

ந.க.எண். 2586/2019/ஊ.வ8 நாள்:22.02.2022

பொருள்: பணியமைப்பு – அரியலூர் மாவட்டம் – ஊரக வளர்ச்சி அலகு – செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக (சத்துணவு) பணிபுரிந்து 19.01.2019 அன்று பணியிடையே காலமான திரு.ஜெ.சத்தியசீலன் என்பவரின் வாரிசான திரு.ச.கோகுல்ராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணியமர்வு செய்யப்பட்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்ந.க.எண்.2586/2019/ஊ.வ.8, நாள்.25.10.2019.
2. அரியலூர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி), கடித ந.க.எண்.2586/2019/ஊ.வ.8 நாள். 29.06.2020.
3. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.26465/2020/டி2, நாள்.20.10.2020.
4. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.18355/2021/D2 நாள். 18.12.2021.
5. மற்றும் தொடர்புடைய இதர ஆவணங்கள்.

* * * * *

<u>ஆணை–</u>

அரியலூர் மாவட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலகு, செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலராக (சத்துணவு) பணிபுரிந்து 19.01.2019அன்று பணியிடையே காலமான திரு.ஜெ. சத்தியசீலன் என்பவரின் வாரிசுதாரரான திரு.ச.கோகுல்ராஜ் என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை ஒன்றில் காணும் செயல்முறைகளின்படி பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து இவர் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக 01.11.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை இரண்டில் காணும் விவரப்படி தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் பணியேற்ற நாளான 01.11.2019 மு.ப. முதல் பணிவரன்முறை செய்யும் பொருட்டு முன்மொழிவுகள் சென்னை, ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பார்வை மூன்றில் காணும் சென்னை ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ச.கோகுல்ராஜ் என்பவரது பணியினை வரன்முறை செய்யும் பொருட்டு தனியரிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்கள் / சான்றுகள் அனைத்தும் ஆய்வு செய்து சரிபார்க்கப்பட்டு, கருணை அடிப்படையிலான பணிநியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்

என்பதை உறுதி செய்து, தனியரது பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் வரன்முறை செய்திடும் பொருட்டு முன்மொழிவுகள் சென்னை, ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலம்அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை நான்கில் காணும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் இயக்குநர் அவர்களது கடிதத்துடன் வரப்பெற்ற அரசு கடித எண்.6895/இ3/2021–5, நாள்.14.12.2021ல் இளநிலை உதவியாளர் பதவிக்கான பணிநியமன அலுவலர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) என்ற நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவரால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும் மாவட்ட ஆட்சித்தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணி வரன்முறை செய்திட ஆணை வழங்கலாம் என தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதத்தில் அரசாணை பத்தி எண். 5.1ல் “02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணிநியமனமும் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One Level Higher than the Appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் கடிதம், அரசுக்கடிதம் மற்றும் இணைத்து வரப்பெற்ற அரசாணையில் கூறப்பட்டுள்ள உரிய தெளிவுரைகளை பின்பற்றி, அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் 01.11.2019முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் திரு.ச.கோகுல்ராஜ் என்பவரது பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 01.11.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
அரியலூர்.

பெறுநர்

திரு.ச.கோகுல்ராஜ்,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம் – உரிய வழியாக

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ/கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம்.
நகல்: ஊ.வ.8 – இருப்பு கோப்பிற்கு